BritishRedCross

## குடும்பத்தினருடனும் நட்புகளுடனும் தொடர்பைத் தொடர்ந்து பேணுவதற்கான குறிப்புகள்:

- குடும்பத்தினருடன் அல்லது நட்புகளுடன் தொடர்ந்தேர்ச்சியாக தொலைபேசி அழைப்புகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அதிலும் குறிப்பாக நீங்களோ அவர்களோ தனிமையில் இருந்தால் இது இன்னும் அவசியமானதாகும்.
- ஒரு அவசர நிலைமையின் போது தொடர்பு கொள்ள இரத்த/நெருங்கிய உறவினர்கள் மற்றும் நட்புகளின் பட்டியல் ஒன்றை எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அவர்களது தொலைபேசி இலக்கங்கள், பெயர்கள் மற்றும் முகவரிகளையும் இதில் உள்ளடக்குங்கள். அவசர நிலைமையின் போது தொடர்பு கொள்வதற்கான உங்களது தகவல்களையும் மணிபர்ஸில் அல்லது பையில் வைத்துக் கொள்ளுங்கள்.
- உங்களது தற்போதைய தொலைபேசி இலக்கத்தையும் முகவரியையும் உங்களது நெருங்கிய உறவினர்களும்/அவசரநிலையில் தொடர்பு கொள்ளக்கூடியவர்களும் தெரிந்து வைத்திருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
- உங்களது குடும்பத்தை விட்டும் நீங்கள் தூரமாக வாழ்ந்தால் அவர்களது அயலவர்களின் அல்லது அவர்களுடன் தொடர்பில் உள்ள வேறு எவருடைய தொடர்பு இலக்கங்களையும் வைத்துக் கொள்ளுங்கள்.
- மற்றைய குடும்ப உறுப்பினர்களின் தொலைபேசி இலக்கங்களை எழுதி உங்களது குழந்தைகளிடம் கொடுத்து வையுங்கள். நீங்கள் சுகவீனமுறும் நிலையில் இதன் மூலம் உங்களது குழந்தைகளால் அவர்களைத் தொடர்புகொள்ள முடியும்.
- நீங்கள் சுகவீனமுற்று வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டால் உங்களது கைப்பேசியையும் அதனது சார்ஜரையும் உடன் கொண்டு செல்ல வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.
- இந்தக் குறிப்புகளை அடுத்தவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்!

## உதவியாக அமையக்கூடிய மேலதிக குறிப்புகள்:

- உங்களிடம் வைத்தியர் பரிந்துரை செய்த மருந்துகள் இருந்தால் அவற்றினதும் உங்களது ஒவ்வாமைகளினதும் தகவல்களையும் இலகுவாக கண்டுபிடிக்க முடியுமாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். உதாரணமாக அவற்றை உங்கள் அவசர தொடர்புத் தகவல்களுடன் வைக்க முடியும்.
- கோவிட்-19 காரணமாக நீங்கள் கடுமையாக சுகவீனமுற்றிருந்தால் உங்களது இரத்த உறவினர்களிடம் / அவசரநிலையில் தொடர்பு கொள்ளக்கூடியவர்களிடம் உங்களது விருப்பங்களைத் தெரிவித்து விட்டீர்களா?

RESTORING FAMILY LINKS

Tamil

## அவசரநிலையில் தொடர்பு கொள்வதற்கான அட்டை

- நீங்கள் சுகவீனமுற்று எவரையும் தொடர்பு கொள்ள முடியாமல் இருந்தால், வேறு எவரிடமாவது அதனைத் தெரியப்படுத்தும்படி உங்களைப் பராமரிக்கும் ஊழியர்களிடம் கூற முடியும்.
- இந்த அவசரத் தொடர்பு அட்டையைத் தாராளமாகப் பயன்படுத்துவதோடு அதனை பணப்பையிலும் வைத்துக் கொள்ளலாம்.
- உங்களது மிக நெருங்கிய உறவினர்களது மற்றும் உங்களது தகவல்களை இதில் உள்ளடக்கவும் (இந்த அட்டையில் அவர்களது தகவல்களை எழுதி ஒரு அவசர நிலையில் தொடர்பு கொள்ள சம்மதம் வழங்கிய ஒரு குடும்ப உறுப்பினர், ஒரு நட்பு அல்லது ஒரு நம்பிக்கையான நபர் இவராகும்). இந்த நபருக்கு சட்ட ரீதியாகவோ அல்லது பொருளாதார ரீதியாகவோ எந்த உரிமைகளோ பொறுப்புகளோ இல்லை. உங்களது அவசரத் தொடர்பு நபர் ஆங்கிலம் பேசுவபராக இருந்தால் பராமரிப்பு ஊழியர்களைத் தொடர்பு கொள்வது இலகுவாக அமையும்.
- பராமரிப்பு ஊழியர்களால் வாசிக்க முடியுமாக இருப்பதற்காக இப்படிவத்தை <u>ஆங்கிலத்தில்</u> நிரப்பவும். உங்களால் <u>ஆங்கிலத்தில்</u> எழுத முடியாவிட்டால் தயவு செய்து ஒருவரது உதவியை நாடவும். இவ்வட்டையின் மொழி பெயர்ப்பு மறுபக்கம் வழங்கப்பட்டுள்ளது.
- இதனை உங்களால் அச்சில் பெற முடியாவிட்டால் இதே மாதிரி ஒரு தாளில் <u>ஆங்கிலத்தில்</u> எழுதி உங்களது பையில் அல்லது மணிபர்ஸில் வைத்துக் கொள்ளுங்கள்.
- இவை உங்களது தககவல்கள். இதனை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு (Red Cross) அனுப்ப வேண்டாம்.

ஆங்கில வடிவம்  CUT  FOLD

BritishRedCross

**Emergency Contact Card**

**About you**

Name…………………………………………………

Date of birth………………………………………

Phone number....…………………………………

Address..........................................................

……………………………………………………

Language(s) spoken……………………………

GP / Family doctor...………………………………

GP phone number………………………………..

**Next of Kin / Emergency Contact**

Name……………………………………………..……..

Relationship to you…………………………………

(It can be family or a friend)

Phone number…………………………………….

Address...........................................................

……………………………………………………

Language(s) spoken……………………………

If under 18 yrs, how old are they? …...………..

Do they live in UK? (please circle) Yes No

**If you have no next of kin, please write "No contact"**

FOLD

**Additional Emergency Contact**

Name……………………………………………..……..

Relationship to you……………………………

(It can be family or a friend)

Phone number……………………………………..

Address...........................................................

……………………………………………………

Language(s) spoken……………………………

If under 18 yrs, how old are they?……...……..

Do they live in UK? (please circle) Yes No

***Have you discussed your wishes with your Next of Kin/ Emergency Contacts, if you were seriously ill due to COVID-19?***

**Please keep this card in your wallet or purse**

**redcross.org.uk/trace**

RESTORING FAMILY LINKS

# அவசர நிலையில் தொடர்பு கொள்வதற்கான அட்டை

**உங்களது விடைகளை தயவு செய்து அவசர நிலையில் தொடர்பு கொள்வதற்கான இந்த அட்டையின் ஆங்கில வடிவத்தில் எழுதவும்.**

## மொழிபெயர்ப்பு

வெட்டவும் மடிக்கவும்

BritishRedCross

## அவசரநிலையில் தொடர்பு கொள்வதற்கான அட்டை

### உங்களைப் பற்றி

பெயர்

பிறந்த திகதி

தொலைபேசி இலக்கம்

முகவரி

பேசும் மொழி(கள்)

GP / குடும்ப வைத்தியர்

GP-யின் தொலைபேசி இலக்கம்

### இரத்த உறவினர் / அவசரத் தொடர்பு நபரின் தகவல்கள்

பெயர்

உறவுமுறை

(இது குடும்பம் அல்லது நட்பாக இருக்கலாம்)

தொலைபேசி இலக்கம்.

முகவரி

பேசும் மொழி(கள்)

18 வயதுக்குட்பட்டால், வயது?

அவர்கள் UK ல் வசிக்கிறார்களா? (தயவு செய்து வட்டமிடவும்) ஆம் இல்லை

உங்களுக்கு நெருங்கிய உறவினர் எவரும் இல்லாவிட்டால் தயவு செய்து “தொடர்பு கொள்ள எவரும் இல்லை” என்று எழுதவும்

மடிக்கவும்

### மேலதிக அவசர நிலையில் தொடர்புத் தகவல்கள்

பெயர்

உறவுமுறை

(இது குடும்பம் அல்லது நட்பாக இருக்கலாம்)

தொலைபேசி இலக்கம்

முகவரி.

பேசும் மொழி(கள்)

18 வயதுக்குட்பட்டால், வயது?

அவர்கள் UK-இல் வசிக்கிறார்களா?

(தயவு செய்து வட்டமிடவும்)

ஆம் இல்லை

***கோவிட்-19** காரணமாக நீங்கள் கடுமையாக சுகவீனமுற்றிருந்தால் உங்களது இரத்த உறவினர்களிடம்/அவசரநிலையில் தொடர்புகொள்ளக் கூடியவர்களிடம் உங்களது விருப்பங்களைத் தெரிவித்து விட்டீர்களா?*

இந்த அட்டையை உங்களது மணிபர்ஸில் அல்லது பையில் வைத்துக் கொள்ளுங்கள்

**redcross.org.uk/trace**

RESTORING FAMILY LINKS